மின் பொறியாளர் அலுவலகம், பொ.ப.து., மின் கோட்டம், சேலம் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை:பொறி.R. மணியரசு, பி.இ,
மின் பொறியாளர், பொ.ப.து.,

செ.மு.ஆ.எண்: 861/கோ.பணிவரன்முறை/நி௨3/2019/நாள்: 21.11.2019

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி - திருமதி. ம.வடிவுக்கரசி அவர்களுக்கு உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் -சம்மந்தமாக.

பார்வை:
1) முதன்மைத் தலைமைப் பொறியாளர்,(நீ.ஆ.து.,) மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) , பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை அவர்களின் செ.மு.ஆ.எண்: :எஸ் 3(1)/30960/2018/ நாள்: 17.10.2018.
2)தலைமைப் பொறியாளர், (கட்டடம்) பொபது., திருச்சி மண்டலம் திருச்சி அவர்களது செயல்முறை ஆணை எண்:நி2/6522-5/2018/ நாள்: 24.10.2018
3)சிறப்பு தலைமைப் பொறியாளர், பொபது., கட்டட( க&ப) வட்டம், சேலம் அவர்களது செயல்முறை ஆணை எண்:நி௨-2/784-2/2018/ நாள்:29.10.2018
4) மின்பொறியாளர், பொபது., மின்கோட்டம், சேலம் அவர்களின் செயல்முறை ஆணை எண798/நி௨-1/2018/நாள: 30.10.2018.
5) உதவி வானொலி பொறியாளர், பொ.ப.து., வானொலி உபகோட்டம், சேலம் அவர்களின் க.எண்.194/வானொலி/2019/ நாள்: 07.11.2019.

------------

ஆணை:

பார்வை 1 முதல் 4 வரையில் காணும் செயல்முறை ஆணைகளின்படி தட்டச்சர் பதவியிலிருந்து பதவி உயர்வில் உதவியாளராக இம்மின்கோட்ட அலுவலகத்தின் கீழ் உள்ள சேலம் வானொலி உபகோட்டம் அலுவலகத்தில் 31.10.2018 மு.ப பணியேற்று, அன்று முதல் தொடர்ந்து பணிபுரிந்து வரும் திருமதி. ம.வடிவுக்கரசி, அவர்கள் நாளது தேதிவரை பதவி இறக்கம் மற்றும் பணி முறிவு ஏதுமின்றி உதவியாளர் பதவியில் ஓராண்டு காலம் நிறைவு செய்துள்ளார்.

அன்னாரது பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில் அவரது பெயரில் நாளது தேதி வரை எவ்வித குற்றச்சாட்டுகளோ ஒழுங்கு நடவடிக்கைகளோ ஏதும் நிலுவையில் இல்லை.

எனவே திருமதி.ம.வடிவுக்கரசி,உதவியாளர் அவர்களுக்கு அப்பதவியில் பணியேற்ற நாளான 31.10.2018 முற்பகல் முதல் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி பொதுவிதி 39 அ(1) -ன்படி உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

21/11/19

மின்பொறியாளர், பொபது
மின்கோட்டம்,சேலம்-7.

21/11/19

பெறுநர்
திருமதி. ம.வடிவுக்கரசி ,
உதவியாளர்,
வானொலி உபகோட்டம்,சேலம்-7. (உரிய வழிமுறையாக)

நகல்: பணிப்பதிவேட்டிற்கு
நகல்: கோப்புக்கு
நகல்: உதவி வானொலி பொறியாளர், வானொலி உபகோட்டம், சேலம்

Scanned with CamScanner